## இப்பகுதியில் பயிற்சிகளுக்கும் கற்பித்தலுக்குமான குறிப்புகள் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| **நூல்கள் எழுத்துருக்களுக்கான அறிமுகம்** | கற்பித்தல் குறிப்புகள் 1-8:<br><br>இதன் முதன்மை நோக்கம் படித்தல் ஊக்குவிப்பை ஓர் இனறியமையாப் பண்பாகக் கொள்ள வெவ்வேறு நூல்களையும் எழுத்துருக்களையும் அறிமுகப்படுத்திக்கொள்வதாகும். |
| **நூல்களையும் எழுத்துருக்களையும் படித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | கற்பித்தல் குறிப்புகள் 9-11:<br><br>இப் பகுதி சரியாக படித்தல் தொடர்பாகக் கண்காணிப்புச் செலுத்துவதோடு பல்வேறு தரப்பட்ட படித்தல் பாடங்களை எப்படி உருவாக்குதல் மற்றும் மாணவர்கள் தமக்குரிய படித்தல் முறைமையை எவ்வாறு திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது போன்றவற்றிற்கு எடுத்துக்காட்டுகளையும் வழங்குகின்றது. |
| **படித்தவற்றை அறிக்கையிடுதல்** | கற்பித்தல் குறிப்புகள் 12-17:<br><br>இப்பகுதியானது முதன்மையாகப் படித்தவற்றைச் செயற்படுத்துவது அதாவது உள்ளடக்கங்கள் பற்றி கலந்துரையாடுதல் பற்றி கையாள்கின்றது. இது படித்தல் தொடர்பான பட்டறிவுகளை வகுப்பறையில் பகிர்ந்து கொள்வது பற்றிய பல்வேறு முன்மொழிவுகளை வழங்குகின்றது. |
| **படித்தவற்றை உருக்காட்டுதல்** | கற்பித்தல் குறிப்புகள் 18-19:<br><br>மாணவர்கள் தம்மைத்தாமே மதிப்பீடு செய்யும் ஆற்றலையும் தமது வாசிப்பு பழக்கங்களையும் விருப்புக்களையும் இனங்கண்டு கொள்ளுதலும் இங்கு முதன்மையான இரு கற்பித்தல் மதியுரைகளாகும். இப்பயிற்சியானது மாணவர்களை தாமாகவே முதிர்ச்சியடைந்த படிப்பவர்களாக வளர்த்தெடுப்பதில் பங்களிப்புச் செய்கின்றது. |

I